அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

**தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களம்**

**இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் I ஆம் வகுப்பின் I ஆம் தரத்தைச் சேர்ந்த பணிப்பாளர் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்) பதவிக்கு நியமிப்பதற்கு விண்ணப்பங்களை கோருவதற்கான அறிவித்தல்**

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் பணிப்பாளர் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்) பதவியில் 01 வெற்றிடம் காணப்படுகின்ற அதேவேளையில், அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்காக தகைமை பெற்றுள்ள இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் I ஆம் வகுப்பின் I ஆம் தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின்படி, 2019.09.12 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட 28/2019 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பின்னிணைப்பு 02 இற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை 2024.08.07 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அல்லது dgitm@itmd.treasury.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரியின் மூலம் அல்லது நேரில் வந்து கையளிப்பதன் மூலம் தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும். விண்ணப்பங்களை அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் பணிப்பாளர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி**
பணிப்பாளர் நாயகம்
தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களம்
அறை இலக்கம் 27
செயலகம்
கொழும்பு - 01

03. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் இல. 2050/43 மற்றும் 2017.12.22 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையின் மூலம் வெளியிடப்பட்ட இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்புக்கு அமைவாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபை ஒன்றினால் நடத்தப்படுகின்ற நேர்முகப் பரீட்சையில் காட்டப்படுகின்ற தேர்ச்சிக்கு அமைவாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் பணிப்பாளர் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்) பதவிக்கு நியமிக்கப்படுகின்றார்.

I. நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கும் ஒழுங்குமுறை கீழே கட்டப்பட்டுள்ளன.

**புள்ளிகள் வழங்கும் நடவடிக்கைமுறை**

| | பரிசீலனை செய்து புள்ளிகள் வழங்குகின்ற தலைப்புகள் | அதிகபட்ச புள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | <u>சேவை அனுபவம் - 60</u><br>I. பதவிக்கு ஏற்புடையதான தரத்தில் செயல்படக்கூடிய மற்றும் திருப்திகரமான சேவை காலம்<br>➢ ஒரு வருடத்திற்கு - 05 புள்ளிகள் வீதம்<br>➢ ஒரு வருடத்திற்கு குறைவாக 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் - 02 ½ புள்ளிகள் வீதம் வழங்கப்படும்<br>➢ 06 மாதங்களுக்கு குறைவான சேவை காலத்திற்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது | 50 |
| | II. நிறுவனத்தின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப தேவைபாட்டுக்கு ( பிரதி/ | 10 |

| | | |
|---|---|---|
| | உதவிப் பணிப்பாளராக ) ஏற்ப முன் அனுபவத்தின் (அதிகபட்சமாக 05 வருடங்களுக்கு) பொருட்டு<br><br>➤ ஒரு வருடத்திற்கு - 02 புள்ளிகள் வீதம்<br>➤ ஒரு வருடத்திற்கு குறைவாக 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் - 01 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்<br>➤ 06 மாதங்களுக்கு குறைவான சேவை காலத்திற்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. | |
| 02 | தேர்ச்சி **- 40**<br><br>***I.*** கல்வித் தகமைகள்<br><br>அ) முறைமைப் பகுப்பாய்வு (*System Analysis*), முறைமை வடிவமைப்பு (*System Designing*), தகவல் தொழில்நுட்ப தேவைப்பாட்டு பகுப்பாய்வு (*Requirement Analysis*), தகவல் தொழில்நுட்ப தரப்புத் தள முகாமைத்துவம் (*Database Management*), கணினி வலையமைப்பு பாதுகாப்பு (*Computer Network Security*) தொடர்பான பட்ட பின் படிப்பு பட்டத்திற்காக<br>- 15 புள்ளிகள்<br><br>(ஆ) மேலே (அ) இல் விபரிக்கப்பட்டுள்ள துறைகள் சம்பந்தமான பட்டப்பின்படிப்பு டிப்ளோமா - 10 புள்ளிகள்<br><br>"பெற்றுள்ள அதிகபட்ச தகைமைகளுக்கு புள்ளிகள் வழங்கப்படும்." | 15 |
| | ***II.*** தொழிற் தகைமைகள்<br>(அ) (I) தகவல் தொழில்நுட்ப துறையில் விசேடமாக தகவல் முறைமை (IS), தகவல் தொழில்நுட்பம் (IT) அல்லது கணனி வலையமைப்பு/ பாதுகாப்பு (Computer Networks / *Security* ) துறைகளுக்கு ஏற்புடையதாக பெற்றுள்ள குறைந்தபட்சம் ஒரு வருடம் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்தைக் கொண்ட டிப்ளமோ கற்கை நெறிக்காக - 10 புள்ளிகள்<br><br>(II) அந்தத் துறையில் 06 மாதம் அல்லது அதற்கு மேற்பட்ட ஒரு வருடத்திற்கு குறைவான கற்கைநெறிக்காக<br>- 05 புள்ளிகள்<br><br>"இந்தப் பகுதிக்காக (I) மற்றும் (II) தொகுதி இரண்டின் கீழ் பெற்றுக்கொள்ள கூடிய அதிகபட்ச புள்ளிகளின் எண்ணிக்கை 10 ஆகும். | 10 |
| | ***III.*** **விசேட பணிகள்/ பங்களிப்புகள்**<br>தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைக்கு ஏற்புடையதாக மேற்கொள்ளப்பட்ட புத்தாக்கம், மேம்படுத்தல் மற்றும் வெற்றிகள், பரிசுகள் பாராட்டுகள் ஆகியவற்றின் கீழ் புள்ளிகள் வழங்கப்படும்.<br><br>(அ) புத்தாக்கம், மேம்படுத்தல் வெற்றிகள் அல்லது பரிசுகளுக்காக ஒன்றுக்கு 02 புள்ளிகள் வீதம் அதிகபட்சமாக 05 பகுதிகளுக்கு -10 புள்ளிகள் | 10 |

| | | |
|---|---|---|
| | (ஆ) பொது 230b மாதிரிப் படிவத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அமைச்சின் செயலாளரினால்/ நிறுவனத்தின் தலைவரினால் சான்றுப்படுத்தப்பட்ட 01 பாராட்டுதலுக்காக 01 புள்ளி வீதம் அதிகபட்சமாக 05 பாராட்டுதல்களுக்கு மாத்திரம் அதாவது, அதிகபட்சமாக 05 புள்ளிகள் மாத்திரம் வழங்கப்படும்<br><br>கவனிக்கவும்<br><br>❖ புத்தாக்கம், மேம்படுத்தல் என்பன விண்ணப்பதாரரினால் மேற்கொள்ளப்பட்டது என்பதை நிறுவனத்தின் தலைவரினால் சான்றுப்படுத்தி இருத்தல் வேண்டும்.<br><br>❖ பரிசுகள் மற்றும் வெற்றிகள் விண்ணப்பதாரியினால் பெறப்பட்டது என்பதற்கான முறையான சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.<br>"இந்தப் பகுதிக்காக (அ) மற்றும் (ஆ) ஆகிய இரண்டு வகுதிகளின் கீழும் பெற்றுக் கொள்ளக்கூடிய அதிகபட்ச புள்ளிகளின் எண்ணிக்கை 10 ஆகும்." | |
| | **IV.** நேர்முகப் பரீட்சையின் போது வெளிப்படுத்தப்படுகின்ற திறன்கள்<br>அ.) தலைமைத்துவம் - 02 புள்ளிகள்<br>ஆ.) தொடர்பாடல் திறன் - 02 புள்ளிகள்<br>இ.) தொழில் பணிவுத் தன்மை - 01 புள்ளிகள் | **05** |

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின்படி, திகதி 2022/07/22

ரவீந்திர பத்மபிரிய
பணிப்பாளர் நாயகன்
தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களம்


தொலைபேசி இலக்கம் - 011- 2484861
தொலைநகல் இலக்கம் - 011 - 2421219
மின்னஞ்சல் முகவரி - dgitm@itmd.treasury.gov.lk